### தாராபுரத்தில் - 332 பயனாளிகளுக்கு நல உதவிகள் வழங்கினார்!

# தமிழ்நாட்டு மக்கள் சுயமரியாதையோடு உரிமையுடன் வாழ நினைத்தவர் கலைஞர்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு:

தாராபுரம், ஜூன் 23-

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்ச் சமூகம், தமிழ்நாட்டு மக்கள், பாதுகாப்பாக, சுயமரியாதையோடு உரிமை பெற்றவர்களாக என்றென்றும் வாழ வேண்டும் என நினைத்தவர் என திருப்பூர் தெற்கு மாவட்டம் தாராபுரத்தில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டை யொட்டிய நல உதவிகள் வழங்கும் விழாவில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசினார்.**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஏற்பாட்டில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாதன் தலைமையில் திருப்பூர் தெற்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி சார்பில் தாராபுரத்தில் 16 பெண்களுக்கு இலவச தையல் எந்திரம், 15 நபர்களுக்கு இஸ்திரி பெட்டி, 100 குடும்பத்திற்கு 19 வகையான ஒரு மாதத்திற்கான மளிகை பொருட்கள், 100 நபர்களுக்கு தென்னங்கன்று மற்றும் மாற்றுத்திறனாளி ஒருவருக்கு ரூ.2 இலட்சம் மதிப்பிலான ஆட்டோ என மொத்தம் 332 பயனாளிகளுக்கு ரூ.13 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை கழக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி வழங்கினார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை ஆண்டு முழுவதும் நாம் கொண்டாட வேண்டும் என்று நம்முடைய முதல்வர் அவர்கள் நமக்கு பணித்திருக்கிறார்கள். தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் ஒரு ஆண்டு முழுவதும் கொண்டாட வேண்டும் என்றால் அவரைப்பற்றி ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிகழ்விலும் நாம் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்க வேண்டும், ஒரு மனிதனைப் பற்றி ஒரு வருடம் தினமும் பேச முடியுமா என்று கேட்டால் அப்படி பேசும் வகையில் உயர்ந்து இருக்கக்கூடிய தலைவர் தலைவர் கலைஞர் அவர்கள் மட்டும் தான். அவர் நம்மை விட்டு பிரிந்த பிறகும் ஒவ்வொரு நாளும் அவரைப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். அவரது பிறந்த நாளில் அவரது புகழை பாடிக்கொண்டிருக்கிறோம், எழுதிக்கொண்டிருக்கிறோம்.

ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளும் பொழுது தலைவர் கலைஞர் அவர்களைப்பற்றி பேசுகிறோம், இயக்கத்தை சாராதவர்களை நான் சந்திக்கும் பொழுது தலைவர் கலைஞர் அவர்களுடைய நினைவுகளை அவர்கள் நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்கள். ஆனால் இதனை ஆண்டுகளும் ஒவ்வொரு நாளும் புதிதாக செய்திகள் ஒருவரைப்பற்றி வந்து கொண்டிருக்கிறது என்றால் அது தலைவர் கலைஞர் அவர்களைப் பற்றித்தான்.

### இதுதான் என்னுடைய கோட்டை

எந்த ஊருக்கு போனாலும் அங்கே ஒரு கழகத் தோழரையோ இல்லையென்றால் ஒரு அதிகாரியையோ நீங்கள் சந்தித்தால் புதிய விஷயம் ஒன்றை தலைவர் கலைஞர் அவர்களைப் பற்றி நம்மோடு அவர்கள் பகிர்ந்து கொள்வார்கள். நான் வண்டியில் வந்துகொண்டிருக்கும் போது கூட எடுத்துச் சொன்னேன். சமீபத்திலே தென்காசியிலே தினமணியின் ஆசிரியர் அவர்களை சந்தித்தேன். அப்பொழுது அவர் ஒரு மிக சுவாரசியமான நிகழ்வு ஒன்றை தலைவர் கலைஞரைப் பற்றி என்னிடம் பகிர்ந்து கொண்டார்கள்.

தான் ஒருநாள் தலைவர் கலைஞர் அவர்களை அறிவாலயத்திலே சந்திக்கச் சென்றேன் என்றார். அறிவாலயத்தில் தொடர்ந்து இயக்கத்தை சார்ந்த சகோதர, சகோதரிகள் வந்து கொண்டிருந்தார்கள். தலைவரிடம் நீண்ட நேரம் பேச முடியவில்லை, நான் சொல்ல வந்த விசயத்தை சொல்ல முடியவில்லை அதனால் கொஞ்ச நேரம் நான் காத்திருந்து எழுந்து விட்டு தலைவர் கலைஞரை பார்த்து "இங்கு எல்லாம் கட்சிக்காரர்கள் வந்துக்கிட்டு இருக்காங்க அதனால் நான் உங்களை வந்து கோட்டையிலே சந்திக்கிறேன்" என்று சென்னேன், தலைவர் உடனே என்னை திரும்பி பார்த்து எந்த கோட்டையிலே என்னை வந்து சந்திப்பாய்? இது தான் என்னுடைய கோட்டை" என்று பதில் சொல்லி இருக்கிறார். அது தான் தலைவர் கலைஞர் அவர்கள்.

இப்படி ஒவ்வொரு நாளும் தலைவர் கலைஞர் அவர்கள் செய்த உறுதியால், தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய திட்டத்தால் பயன் அடைந்தவர்களை நாம் ஒவ்வொரு நாளும் சந்தித்துக்கொண்டிருக்கிறோம். அந்த திட்டத்தின் பயன், பலன் தலைமுறை தலைமுறைகளாக நம்மை தழுவி, நம்மோடு நம்மை பாதுகாக்கக்கூடிய ஒன்றாக, நமக்கு அடித்தளமிடக்கூடிய ஒன்றாக அது இன்று வரை, இன்றோடு நிற்கப்போவதில்லை நமக்கு அடுத்த தலைமுறை, அதற்கு அடுத்த தலைமுறை, அதற்கு அடுத்த தலைமுறை என்று தமிழ் நாட்டு மக்களுக்கு பாதுகாப்பு கேடயமாக அது நிச்சயமாக இருக்கும். ஏனென்றால் தலைவர் கலைஞர் அவர்கள் இன்றைப்பற்றி மட்டுமே சிந்தித்த தலைவர் இல்லை. இந்த தமிழ்ச் சமூகம் தமிழ் மக்கள், தமிழ்நாட்டு மக்கள் பாதுகாப்பாக, சுயமரியாதையோடு உரிமை பெற்றவர்களாக அவர்கள் என்றென்றும் வாழ வேண்டும் என்று நினைத்த தலைவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

### பெண்ணுக்கு உரிமை!

இங்கே இருக்கக்கூடிய சகோதரிகள் எடுத்துச்சொன்னார்கள், தலைவர் கலைஞர் அவர்கள் தான் சொத்திலே பெண்களுக்கு சமஉரிமை இருக்கிறது என்ற சட்டத்தைக் கொண்டுவந்த தலைவர் தலைவர் கலைஞர் அவர்கள் தான். இல்லையென்றால் திருமணம் ஆகும் பொழுது பெற்றோருடன் இருக்கும் உறவு உனக்கு இன்றோடு முடிந்து விட்டது, உனக்கு இந்த வீட்டில் எந்த உரிமையும் கிடையாது என்று சொல்லக்கூடிய நிலை, தத்தளிக்கக்கூடிய நிலையிலே தான் பெண்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆனால் அந்த குடும்பத்திலே இருக்கக்கூடிய சொத்திலே இந்த பெண்ணுக்கு உரிமை இருக்கிறது என்ற மரியாதையை உருவாக்கித் தந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

பெண்கள் படிக்க வேண்டும் என்பதற்காக 10ம் வகுப்பு வரை பெண்களின் கல்வியை நிசமாக்கியது, உறுதிப்படுத்தியது தலைவர் கலைஞர் அவர்கள் தான், இன்று இந்தியாவிலே இருக்கக்கூடிய பெரிய மாநிலங்களிலேயே உயர்கல்விக்கு பெண்கள் அதிகமாக போகக் கூடிய மாநிலம் தமிழ்நாடு என்ற அந்த பெருமையை பெற்றிருக்கிறது என்றால் அதற்கு காரணம் தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்த அந்தத்திட்டம்.

அதுமட்டுமல்ல இந்தியாவிலேயே (இன்றைக்கு சொல்லுகிறார்கள் இந்தியாவையே நாங்க தான் கண்டுபிடிச்சோம் நீங்கள் எல்லாம் தேசத் துரோகிகள் என்று சொல்லுகிறார்கள்) முதன்முதலாக தகவல் தொழில்நுட்பத்துறைக்கு என்று ஒரு பாலிசியை ஒரு அரசாங்கம் உருவாக்கியது என்றால் அது தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி மட்டும் தான். பள்ளிக்கூடங்களில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு கம்பியூட்டர் பயிற்சி தந்தது தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே தான். அதனால தான் இத்தனை பேர் இன்று உலகத்திலே இருக்கக்கூடிய பெரிய பெரிய நிறுவனங்களில் வேலை பார்க்கக்கூடிய வாய்ப்பை தமிழ்நாட்டிலே இருக்கக்கூடியவர்களுக்கு கிடைத்திருக்கிறது என்றால் (நம்மை திட்டக் கூடியவர்களுக்கும் சேர்த்து தான் சொல்கிறேன்) தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கிய அந்த திட்டத்தால் தான்.



இன்று அண்ணன் தளபதி அவர்கள் முதலமைச்சர் பொறுப்பற்றுக்கொண்ட பிறகு நம் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பெண்கள் உயர்கல்வியை நோக்கி சென்றுவிட்டார்கள். அதனால் திருமண உதவித் திட்டத்தை தாண்டி நீ என்ன வேண்டுமானாலும் படிமா, ஒரு சகோதரனாக, ஒரு தந்தையாக நின்று மாதம் உனக்கு 1,000 ரூபாய் நான் வழங்குகிறேன் என்று இந்த திட்டத்தை தந்திருக்கக்கூடிய ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, நகரப் பேருந்துகளில் பெண்கள் பயணம் செய்வதென்றால் உங்களுக்கு கட்டணம் கிடையாது என்று ஒரு சகோதரனாக சொன்னது திராவிட மாடல் ஆட்சி, அண்ணன் தளபதி அவர்களின் ஆட்சி. தலைவர் கலைஞருடைய ஆட்சியின் நீட்சியாக தந்தை பெரியாரின் கனவுகளை யெல்லாம் நிறைவேற்றி வரக் கூடிய ஆட்சியாக, பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட எந்த ஒரு தமிழ்நாட்டை உருவாக்கி காட்ட வேண்டும் என்று நினைத்தாரோ அந்த தமிழ்நாட்டை உருவாக்கி காட்டிக் கொண்டிருக்கக்கூடிய திராவிட மாடல் ஆட்சியாக நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய ஆட்சி தமிழ்நாட்டிலே இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கக் கூடிய ஆட்சி.

### ஆளுநர் பதவியை தூக்கி எறியக்கூடிய காலம்!

இங்கே ஒரு சலசலப்பை உருவாக்கிட வேண்டும். நம்மை எல்லாம் அச்சுறுத்தி விட வேண்டும் என்று தொடர்ந்து சில பேர் கனவு கொண்டிருக் கிறார்கள். நாம் எவ்வளவோ விசயங்களை தாண்டி வந்திருக்கக்கூடியவர்கள், ஆளுநர் ஒருவர் இருக்கிறார் தமிழ்நாட்டிலே, ரெம்ப நாளா சொல்லிக்கிட்டு இருக்கோம் இந்த ஆளுநர் பதவி என்பதே வேண்டாம், தேவை இல்லாத ஒன்று என்று, அது தூக்கியெறியக் கூடிய காலம் வெகுவிரைவிலே வந்து விடும் என்று நிச்சயமாக நாம் உறுதியோடு இருக்கலாம்,

ஆனால் அதுக்கு முன்னாடி ஆளுநர் நமக்கு நிறைய பாடங்கள் எடுக்கிறார். தமிழ்நாட்டுக்கு என்ன பெயர்சொல்லி நம்ம கூப்பிடனுன்னு அவர் சொல்றார், தமிழ்நாடுன்னு ஏன் சொல்லறீங்க அவருக்கு பயம், தமிழ்நாடு, தமிழ்நாடு என்று சொல்லும் போது ஒரு தனித்துவம் வந்து விடுகிறது அதனால் தமிழகம் என்று சொல்லுங்கள் என்று. நீ எதற்கு இதெல்லாம் தலையிடுற, என் ஊரு, என்னுடைய மண், என்னுடைய நாடு, என்னுடைய மாநிலம் நான் எப்படி அழைப்பேன் என்பதை நான் நிர்ணயம் செய்வேன், உங்களுக்கு யாருக்கும் அந்த உரிமை கிடையாது, ஒரு அமைச்சர் அந்த கேபினட்டில் இருக்கிறதா, இல்லையா என்பதை முதலைமைச்சர் மட்டும் தான் முடிவு செய்ய முடியும், இலாகாவை யார் வகிப்பது என்பது முதலைமைச்சர் மட்டும் தான் முடிவு செய்ய முடியும்,

ஆளுநருக்கு அங்கு வேலையில்லை அப்படி உங்களுக்கு அந்த வேலை வேண்டும் என்றால் வந்து தேர்தலில் நின்னு (செயிக்க முடியாது நான் என்ன செய்றது) முயற்சி செய்து பாருங்கள், அதனால இந்த தேவையில்லாத வேலைகளை செய்து கொண்டு இங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கக் கூடிய நல்லாட்சிக்கு ஒரு களங்கத்தை ஏற்படுத்திட முடியும் என்று கனவு கண்டு கொண்டு சிலபேர் இங்கே உலாவந்து கொண்டிருக்கிறார்கள். அண்ணன் தளபதி அவர்கள் சொன்னது போல வரக்கூடிய நாடாளுமன்றத் தேர்தல் யார் ஆட்சிக்கு வரவேண்டும் என்பதை விட யார் ஆட்சிக்கு மறுபடியும் வந்திரக்கூடாது என்பதை முடிவு பண்ணக் கூடிய தேர்தல் என்பதை நாம் நினைவிலே வைத்துக்கொள்ளவேண்டும்.

ஏனென்றால் இந்திய ஒன்றியத்திலே ஆட்சிசெய்து கொண்டிருக்கக் கூடியவர்கள் நாம் கொண்டுவந்திருக்கக்கூடிய இட ஒதுக்கீட்டை, இந்த இட ஒதுக்கீட்டின் வழியாக இங்கு நிறைய பேர் கேட்பார்கள், சில இளைஞர்கள் கேட்கலாம், அவுங்களுக்கு தெரியாது, எங்க அப்பா படிக்க வச்சாரு, எங்க அம்மா படிக்க வச்சாங்க, உங்க அம்மா படிக்க வச்சிருக்கலாம், அப்பா படிக்க வச்சிருக்கலாம், ஆனால் ஒரு காலகட்டத்திலே அந்த பள்ளிக்கூடத்திற்கோ, கல்லூரிக்குள்ளோ நீ கால் வைத்து விடக்கூடாது என்று கங்கணம் கட்டிக்கொண்டு வேலை செய்தார்களே அதை உடைத்து திராவிட இயக்கம், தலைவர் கலைஞர் அவர்கள், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்கள், உங்களுக்கு அந்த வாய்ப்புகளை உருவாக்கி தந்தது திராவிட இயக்கம், மருத்துவ கல்லுரிக்குள் போய் படிக்கனும்னா படிக்க முடியாது சமஸ்கிருதம் தெரியணும் என்பதை உடைத்து மாற்றியது நீதிக்கட்சி, திராவிட இயக்கம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது, இதையெல்லாம் மறுபடியம் மாற்றிவிட வேண்டும்.

### நம்முடைய தமிழ் அடையாளங்கள்!

நம்முடைய தமிழ் அடையாளங்கள் சுயமரியாதை, தமிழ்நாட்டுக்கு என்று இருக்கக்கூடிய வளர்ச்சி, இந்திய நாட்டை எடுத்துக்கொண்டோம் என்றால் பல வழிகளிலே முன்னேறியிருக்கக் கூடிய மாநிலமாக பொருளாதாரத்திலாக இருக்கட்டும், அடிப்படை வசதிகளாக இருக்கட்டும், மருத்துவ வசதிகளாக இருக்கட்டும், கல்லவியாக இருக்கட்டும் என்று எல்லாவிதத்திலுமே முன்னேறி இருக்கக்கூடிய ஒரு மாநிலமாக தமிழ்நாடு இன்று விளங்கிக்கொண்டிருக்கிறது இதையெல்லாம் அளித்து விட வேண்டும், மறுபடியும் தான் இருந்த இடத்திற்கு தாங்கள் வந்து அமர்ந்து கொண்டு மற்றவர்களை ஒதுக்கி விட்டு, ஓரம் கட்டி விட்டு கோலோச்ச வேண்டும்.,

செங்கோல் எடுத்துட்டு போயிட்டா தமிழ்நாட்டிலே கோலோச்ச முடியுமா? முடியாது, அதனால இந்த கனவுகளை எல்லாம் தகர்த்தெறியக் கூடிய தேர்தல் வரக்கூடிய தேர்தல் என்பதை நாம் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். தலைவர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை கொண்டாடிக் கொண்டிருக்கிறோம் அவருக்கு நாம் செய்யக்கூடிய மிகப்பெரிய கைமாறு தமிழ்நாட்டை பாதுகாப்பது அது மட்டுமில்லாமல் இந்த நாட்டிலே ஒரு ஆட்சி மாற்றத்தை கொண்டுவந்து தமிழ் நாட்டு உரிமைகளை, மாநில உரிமைகளை புரிந்து கொள்ளக்கூடிய, மதிக்கக்கூடிய ஒரு நல்லாட்சியை அங்கே இருக்கக்கூடிய ஒன்றியத்திலே நாம் உருவாக்கி காட்டவேண்டும், அது தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நாம் செய்யக்கூடிய மிகப் பெரிய நன்றிக்கடன் என்பதை நினைவிலே வைத்துக்கொண்டு நாம் பாணியாற்ற வேண்டும்

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசினார்.

இதில் கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி, கழக மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் பா.இராணி, துணைச் செயலாளர் சத்யா பழனிகுமார், பிரச்சார குழு செயலாளர் உமா மகேஸ்வரி, துணை செயலாளர் மாலதி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் க.செல்வராஜ், மாவட்ட கழக துணைச் செயலாளர் ராசி கே.ஆர். முத்துக்குமார், பெ.பிரபாவதி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், ஆர்.சிவக்குமார், தாராபுரம் நகர் மன்ற தலைவர், திருப்பூர் தெற்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கு.பாப்புகண்ணன், திருப்பூர் தெற்கு மாவட்ட மகளிர் அணி தலைவர் சரஸ்வதி ராஜேந்திரன், காங்கேயம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் செல்வி முருகேசன், தகவல் தொழில்நுட்பணி மாவட்ட துணை அமைப்பாளர் ஆனந்தி, சுப்பிரமணியன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் செ.அனிதா செல்வராஜ்,

மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் எல்.லதா, மாவட்ட மகளிர் அணி துணைத் தலைவர் மா.அருக்காணி, துணை அமைப்பாளர்கள் பா.சரஸ்வதி, சி.ஸ்ரீவிஜயலட்சுமி, வெ.மலர்விழி, எ.ஷாஹிதா, கே.சுசீலா, ஆர்.உமாமகேஸ்வரி, டி.பாரதி, சு.உமாமகேஸ்வரி, கே.அமுதவல்லி, மகளிர் தொண்டரணி தலைவர் பி.பானுமதி, துணைத் தலைவர் டி.சசிகலா, துணை அமைப்பாளர்கள் எம்.கண்ணகி, வி.முத்துலட்சுமி, எஸ்.பாக்கியலட்சுமி, எம்.சித்ரா, ஆர்.சரோஜா, எஸ்.மும்தாஜ், ந.விஜயலட்சுமி, எஸ்.திவ்யா உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, வட்டக் கழக, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### செஞ்சி ஒன்றியம் - கோனை புதூர், சேரனூரில்

# ரூ. 2.99 கோடி மதிப்பீட்டில் புதிய தார்ச் சாலை அமைக்கும் பணி!

## அமைச்சர் செஞ்சிமஸ்தான் தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஜூன் 23-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் கோணை புதூர், சேரானூர் கிராமங்களுக்கு செல்லும் சாலையை தரம் உயர்த்தி அமைப்பதற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

கோணைபுதூர், சேரானூர் ஆகிய கிராமங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர்கள் பிருந்தா சக்தி முருகன்,ராஜலட்சுமி சேகர் ஆகியோர் வரவேற்றனர், நபார்டு மற்றும் கிராம சாலைகள் உதவி கோட்ட பொறியாளர் விழுப்புரம் கண்ணன் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு நபார்டு திட்டத்தின் கீழ் கோனை புதூர் கிராமத்தில் 1 கோடியே 77 லட்சத்து 61 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், சேரானூர் கிராமத்தில் 1 கோடியே 21 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 2 கோடியே 99 லட்சத்தி 16 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய தார் சாலை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் துணை சேர்மன் ஜெயபாலன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,உதவி பொறியாளர் கிருஷ்ண குமார், ஒன்றிய அவைத்தலைவர் ஆறுமுகம்,ஒன்றிய கவுன்சிலர்மல்லிகா சேகர், முன்னாள் கவுன்சிலர் ரேவதி கணேசன்,மாவட்ட பிரதிநிதி கோடீஸ்வரன், நிர்வாகிகள் நாகராஜ், சீதாராமன், மூவேந்தன், வெண்ணி, சேகர், தர்மன், அண்ணாதுரை, ரவிச்சந்திரன், பாண்டியன், ரவி, சுப்பிரமணியன், தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் இளைஞர் அணி அமைப்பாளர் கோபாலன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.


தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
கள்ளக்குறிச்சி மாவட்டம்
ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு

முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (MGSMT- 25% Component) 2022-23ம் ஆண்டிற்கு ஊரகச் சாலைப் பணிகள் மேற்கொள்ளுதல்

1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கள்ளக்குறிச்சி இணை இயக்குநர்/ திட்ட இயக்குநரால் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 2022–23ம் ஆண்டு முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (MGSMT- 25% Component) 21 ஊரகச் சாலைப் பணிகள் மேற்கொள்ள மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைமுறை) வரவேற்கப்படுகிறது.
3. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக 21.06.2023 முதல் 05.07.2023 வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. முக்கியமான நாள் மற்றும் நேரம்.
(i) மின் ஒப்பந்த படிவம் பதிவிறக்கம் மற்றும் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 05.07.2023 பிற்பகல் 3.00 மணி வரை.
(ii) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 05.07.2023, 4.00 மணிக்கு.

செ.ம.தொ.இ./ 3203 /ஒப்பந்தப்புள்ளி/2023
இணை இயக்குநர்/திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கள்ளக்குறிச்சி.
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"



கோயம்புத்தூர் மாநகராட்சி
பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)
ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். (e) 39 / 2023 நாள்: 21.06.2023

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | கிழக்கு மண்டலம் - 24க்குட்பட்ட பகுதியில் மழைநீர் வடிகால், தார் சாலை, மைய தடுப்பு மற்றும் நடைபாதை அமைத்தல் பணிகள் | 4 பணிகள் | 06.07.2023 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 07.07.2023 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன் ஹால், கோயம்புத்தூர்-1. தொலைபேசி எண்.0422 2396026 Email: commr.coimbatore@tn.gov.in
வெ.ஆ.எண். 301/செ.தொ.அ/கோவை/நாள் : 21.06.2023
ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி
" சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"



கோயம்புத்தூர் மாநகராட்சி
பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)
ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். (e) 5 / 2023 நாள்: 19.06.2023

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் - 63,64,65,66, 67,68,69,70,80,81,82,83 மற்றும் 84-க்குட்பட்ட பகுதிகளில் மழை நீர் வடிகால், சாலை பணிகள், மோட்டார் பொருத்துதல் பணி, மராமத்து பணிகள், பராமரிப்பு பணிகள், பாதாள சாக்கடை பணிகள் மற்றும் குடிநீர் பணிகள் | 26 பணிகள் | 04.07.2023 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 05.07.2023 பிற்பகல் 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன் ஹால், கோயம்புத்தூர்-1. தொலைபேசி எண்.0422 2396026 Email: commr.coimbatore@tn.gov.in
வெ.ஆ.எண். 304/செ.தொ.அ/கோவை/நாள் : 21.06.2023
ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி
" சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"



தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
கள்ளக்குறிச்சி மாவட்டம்
ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு

முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (MGSMT- 25% Component) 2022-23ம் ஆண்டிற்கு ஊரகச் சாலைப் பணிகள் மேற்கொள்ளுதல்

1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கள்ளக்குறிச்சி இணை இயக்குநர்/ திட்ட இயக்குநரால் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 2022–23ம் ஆண்டு முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (MGSMT- 25% Component) 3 ஊரகச் சாலைப் பணிகள் மேற்கொள்ள மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைமுறை) வரவேற்கப்படுகிறது.
3. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக 21.06.2023 முதல் 20.07.2023 வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. முக்கியமான நாள் மற்றும் நேரம்.
(i) மின் ஒப்பந்த படிவம் பதிவிறக்கம் மற்றும் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 20.07.2023 பிற்பகல் 3.00 மணி வரை.
(ii) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 20.07.2023, 4.00 மணிக்கு.

செ.ம.தொ.இ./ 3204 /ஒப்பந்தப்புள்ளி/2023
இணை இயக்குநர்/திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கள்ளக்குறிச்சி.
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"



தமிழ்நாடு அரசு
தாம்பரம் மாநகராட்சி
ந.க. எண்.44/2022/இ1 (மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு) நாள்: 20.06.2023

தாம்பரம் மாநகராட்சி ஆணையர் அவர்களால் 15th CFC (Untied Grant) 2022-23 நிதியின் கீழ் கீழ்க்காணும் பணிகளை செய்து முடிக்க https://tntenders.gov.in என்ற E-Tendering இணையதளத்தின் வாயிலாக, E-Submission மூலமாக இரண்டு உறை (Two Cover System) முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

| வ. எண். | பணிகளின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி நாள் | டேவணித் தொகை 1% (ரூ) | செயலாக்க கட்டணம் (ரூ) | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் ஜிஎஸ்டி பிரதான சாலை, MIT மேம்பாலம், PONDS மேம்பாலம் ஆகிய பகுதியில் மொத்தம் 139 மின் கம்பங்கள் அமைத்து மின் விளக்குகள் பொருத்தும் பணி. | 100.00 | 12.07.2023 | 100000 | 5000 | 3 மாதங்கள் |

ஒப்பந்தப்புள்ளி கலந்தாய்வு நாள். 28.06.2023 காலை 11.00 மணி மண்டலம் II, தாம்பரம் மாநகராட்சி, ஒப்பந்தப்புள்ளி விபர அட்டவணை மற்றும் நிபந்தனைகள் https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் 22.06.2023 முற்பகல் 10.00 மணி முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அதே இணையதள முகவரியில் ஒப்பந்தப்புள்ளி விவரங்களை பதிவேற்றம் செய்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிகளுக்கான டேவணித் தொகை பணியின் மதிப்பில் 1% வங்கி வரைவோலையாகவோ அல்லது மாநகராட்சி கருவூலத்திலோ தொகை செலுத்திய ரசீது தாம்பரம் மாநகராட்சி மண்டலம்-II, பல்லாவரம் அலுவலகத்திற்கு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சேருமாறு அனுப்பப்பட வேண்டும்.

செ.ம.தொ.இ./3161/ஒப்பந்தப்புள்ளி/2023 ஆணையாளர், தாம்பரம் மாநகராட்சி
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்".